# திண்டுக்கல் மேற்கு மாவட்டம்

## நத்தம் வடக்கு, நத்தம் தெற்கு, நத்தம் மத்திய - சாணார்பட்டி வடக்கு, சாணார்பட்டி தெற்கு, சாணார்பட்டி மத்திய ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் மற்றும் ஒன்றியக் கழக பொறுப்பாளர் நியமனம்

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் - தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **“தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு”** ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

திண்டுக்கல் மேற்கு மாவட்டம், நத்தம் வடக்கு, நத்தம் தெற்கு ஆகிய 2 ஒன்றியங்கள், நத்தம் பேரூர் - சாணார்பட்டி வடக்கு, சாணார்பட்டி தெற்கு ஆகிய 2 ஒன்றியங்கள் மற்றும் திண்டுக்கல் தெற்கு ஒன்றியத்தில் உள்ள 4 ஊராட்சிகள் ஆகிய கழக அமைப்புகள் நத்தம் சட்டமன்றத் தொகுதிக்குள் வருவதால், கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் மேற்சொன்ன ஒன்றியங்களுக்குட்பட்ட ஊராட்சிகள் மற்றும் பேரூர் **நத்தம் வடக்கு, நத்தம் தெற்கு, நத்தம் மத்திய மற்றும் சாணார்பட்டி வடக்கு, சாணார்பட்டி தெற்கு, சாணார்பட்டி மத்திய** ஆகிய ஒன்றியக் கழகங்களாக பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களுக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **நத்தம் வடக்கு, நத்தம் தெற்கு, நத்தம் மத்திய – சாணார்பட்டி வடக்கு, சாணார்பட்டி தெற்கு, சாணார்பட்டி மத்திய** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாக அமையும்.

**நத்தம் வடக்கு ஒன்றியம்:** 1.பிள்ளையார்நத்தம், 2.செந்துறை, 3.குடகிபட்டி, 4.சிரங்காட்டுப்பட்டி, 5.சேத்தூர், 6.கோட்டையூர்நத்தம், 7.கோசுக்குறிச்சி ஆகிய 7 ஊராட்சிகள்.

**நத்தம் தெற்கு ஒன்றியம்:** 1. பரளிபுதூர், 2.ரெட்டியபட்டி, 3.லிங்கவாடி, 4.சாத்தாம்பாடி, 5.பண்ணுவார்பட்டி, 6.செல்லப்பநாயக்கன்பட்டி, 7.ஊராளிபட்டி, 8.முளையூர் ஆகிய 8 ஊராட்சிகள்

**நத்தம் மத்திய ஒன்றியம்:** 1.புன்னப்பட்டி, 2.வேலம்பட்டி, 3.என்.புதுப்பட்டி, 4.என்.குட்டுப்பட்டி, 5.சமுத்திராபட்டி, 6.சிறுகுடி, 7.ஆவிச்சிபட்டி, 8.பூதகுடி ஆகிய 8 ஊராட்சிகள் மற்றும் நத்தம் பேரூர்.

**சாணார்பட்டி வடக்கு ஒன்றியம்:** 1.வி.டி.பட்டி, 2.வீரசின்னம்பட்டி, 3.இராகலாபுரம், 4.வி.எஸ்.கோட்டை, 5.செங்குறிச்சி, 6.கம்பிளியம்பட்டி, 7.சிலுவத்தூர் ஆகிய 7 ஊராட்சிகள்.

**சாணார்பட்டி தெற்கு ஒன்றியம்:** 1.அஞ்சுகுளிப்பட்டி, 2.வேம்பார்பட்டி, 3.கோம்பைப்பட்டி, 4.கணவாய்பட்டி, 5.திம்மணநல்லூர், 6.ஆவிளிபட்டி, 7.மருனூத்து ஆகிய 7 ஊராட்சிகள்.

**சாணார்பட்டி மத்திய ஒன்றியம்:** 1.கூவனூத்து, 2.தவசிமடை, 3.எமக்கலாபுரம், 4.டி.பஞ்சம்பட்டி, 5.சாணார்பட்டி, 6.மடூர், 7.இராஜக்காபட்டி ஆகிய 7 ஊராட்சிகள்

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **நத்தம் வடக்கு, நத்தம் தெற்கு, நத்தம் மத்திய – சாணார்பட்டி வடக்கு, சாணார்பட்டி தெற்கு, சாணார்பட்டி மத்திய** ஆகிய ஒன்றியங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**நத்தம் வடக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : ஆ.பழனிச்சாமி, சித்திரைக்கவுண்டன்பட்டி, செந்துறை & அஞ்சல், நத்தம் வட்டம்.

**நத்தம் தெற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : பெ.ரத்தினக்குமார், என்.புதுக்கோட்டை ரெட்டியபட்டி அஞ்சல். நத்தம் வட்டம்.

**நத்தம் மத்திய ஒன்றியம்:** பொறுப்பாளர் : மு. சேக்சிக்கந்தர்பாட்சா, 44 பஜார் தெரு, நத்தம் & அஞ்சல், நத்தம் வட்டம்.

**சாணார்பட்டி வடக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : சி. மோகன், 4/278, தேத்தாம்பட்டி, வத்தலதொப்பம்பட்டி, சிலுவத்தூர் அஞ்சல், திண்டுக்கல் மாவட்டம்.

**சாணார்பட்டி தெற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : இரா. தர்மராஜன், திம்மணநல்லூர், டி.ராமராஜபுரம், வேம்பார்பட்டி வழி, திண்டுக்கல் வட்டம்.

**சாணார்பட்டி மத்திய ஒன்றியம்:** பொறுப்பாளர் : சூ. ஜான்பீட்டர், 4/103/1, மெயின் ரோடு, கொசவபட்டி, சாணார்பட்டி அஞ்சல், திண்டுக்கல் வட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 19.06.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# நீலகிரி மாவட்டம்

## உதகை கிழக்கு, உதகை மேற்கு ஆகிய நகரங்களில் அடங்கியுள்ள வார்டுகள் விவரம் - நகரக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம் மற்றும் உதகை வடக்கு (கிழக்கு), உதகை வடக்கு (மேற்கு), உதகை தெற்கு (கிழக்கு), உதகை தெற்கு (மேற்கு), பந்தலூர் மேற்கு, பந்தலூர் மத்திய, பந்தலூர் கிழக்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் - ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் - தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **“தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு”** ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகை நகரம் இரண்டு நகரங்களாகவும், பந்தலூர் மேற்கு, கிழக்கு ஒன்றியம் இணைத்து மூன்றாகவும், உதகை வடக்கு மற்றும் தெற்கு ஆகிய இரண்டு ஒன்றியங்கள் நான்கு ஒன்றியக் கழகங்களாப் பிரிக்கப்பட்டு புதிய ஒன்றியக் கழக பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

அவ்வாறு பிரிக்கபட்ட நகரங்கள் பின்வரும் வார்டுகள் கொண்டதாகவும் - ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகளை கொண்டதாக அமையும்.

**நகரங்கள்**

**உதகை கிழக்கு நகரம் : வார்டு எண் : 1 முதல் 20வரை.**

வாக்குச்சாவடிகள் : 85, 86, 87, 88, 89, 90, 91, 92, 93, 94, 95, 96, 97, 98, 103, 117, 118, 119, 120, 121, 122, 123, 124, 125, 126, 127, 128, 129, 135, 136, 137, 140, 141, 142, 143, 144, 145, 146, 147, 148

**உதகை மேற்கு நகரம் : வார்டு எண் : 21 முதல் 36 வரை.**

வாக்குச்சாவடிகள் : 99, 100, 101, 102, 104, 105, 106, 107, 108, 109, 110, 111, 112, 113, 114, 115, 116, 130, 131, 132, 133, 134, 138, 139, 157, 158, 159, 160, 161, 149, 150, 151, 152, 153, 154, 155, 156, 162, 163

**நகரக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **உதகை கிழக்கு, உதகை மேற்கு** ஆகிய நகரக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, நகரக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**உதகை கிழக்கு நகரம் : பொறுப்பாளர்: எஸ். ஜார்ஜ்** **உதகை மேற்கு நகரம்: பொறுப்பாளர்: ரமேஷ்**

**ஒன்றியங்கள்**

**உதகை வடக்கு (கிழக்கு) ஒன்றியம் :** 1. கூக்கல், 2. கக்குச்சி, 3.தும்மனட்டி ஆகிய 3 ஊராட்சிகள் மற்றும் சோலூர் பேரூர்.

**உதகை வடக்கு (மேற்கு) ஒன்றியம் :** 1. தூனேரி, 2.எப்பநாடு, 3. கடநாடு, 4. உல்லத்தி ஆகிய 4 ஊராட்சிகள் மற்றும் நடுவட்டம் பேரூர்.

**உதகை தெற்கு (கிழக்கு) ஒன்றியம் :** 1. பாலகொலா, 2. குந்தா, 3.முள்ளிகூர், 4. இத்தலார் ஊராட்சி (வாக்குச்சாவடிகள்: 193 முதல்197 வரை) ஆகிய 4 ஊராட்சிகள் மற்றும் பெக்கட்டி பேரூர்.

**உதகை தெற்கு (மேற்கு) ஒன்றியம் :** 1. நஞ்சநாடு, 2. தொட்டபெட்டா, 3.இத்தலார் (வாக்குச்சாவடிகள்: 185 முதல் 192 வரை) ஆகிய 3 ஊராட்சிகள் மற்றும் கீழ்குந்தா பேரூர்.

**பந்தலூர் மேற்கு ஒன்றியம் :** 21 முதல் 44 வரை மற்றும் 50 ஆகிய 25 வாக்குச்சாவடிகள்.

**பந்தலூர் மத்திய ஒன்றியம் :** 1 முதல் 21 மற்றும் 46, 47, 48, 49, 51 ஆகிய 26 வாக்குச்சாவடிகள்.

**பந்தலூர் கிழக்கு ஒன்றியம் :** 52 முதல் 81 வரை ஆகிய 30 வாக்குச்சாவடிகள்.

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **உதகை வடக்கு (கிழக்கு), உதகை வடக்கு (மேற்கு), உதகை தெற்கு (கிழக்கு), உதகை தெற்கு (மேற்கு), பந்தலூர் மேற்கு, பந்தலூர் மத்திய, பந்தலூர் கிழக்கு** ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**உதகை வடக்கு (கிழக்கு) ஒன்றியம் : பொறுப்பாளர்: கே.ஆர். காமராஜ்**

**உதகை வடக்கு (மேற்கு) ஒன்றியம் : பொறுப்பாளர்: மா. தொரை**

**உதகை தெற்கு (கிழக்கு) ஒன்றியம் : பொறுப்பாளர்: இ.எல்.பரமசிவன்**

**உதகை தெற்கு (மேற்கு) ஒன்றியம் : பொறுப்பாளர்: சி. ஜெகதீசன்**

**பந்தலூர் மேற்கு ஒன்றியம் : பொறுப்பாளர்: எஸ். சிவானந்தராஜா**

**பந்தலூர் மத்திய ஒன்றியம் : பொறுப்பாளர்: க. ராஜ்குமார்**

**பந்தலூர் கிழக்கு ஒன்றியம் : பொறுப்பாளர்: த. சுஜேஷ்**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 19.06.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாடு வாரியம் சார்பில் கட்டப்பட்டு வரும்

# இராஜாதோட்டம் - பி.ஆர்.என். கார்டன் திட்டப் பகுதியில் கட்டுமானப் பணி!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, ஜுன் 20-

இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு நேற்று (19.6.2025) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டு வரும் இராஜாதோட்டம் மற்றும் பி.ஆர்.என்.கார்டன் திட்டப்பகுதிகளின் கட்டுமான பணிகள், சென்னை கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் பெரியார் நகர் ,மற்றும் ஜவகர்நகரில் கட்டப்பட்டு வரும் முதல்வர் படைப்பகம், மற்றும் நூலகத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு பின்னர் பேசுகையில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டலின்படி பல்வேறு திட்டபணிகளை குறித்து இன்று ஆய்வு மேற்கொண்டோம். இதில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய இராஜா தோட்டம் திட்டப்பகுதிகளின் கட்டுமான பணிகளை துரிதப்படுத்த முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார். அதன்படி இத்திட்டப்பகுதி கடந்த 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பணிகள் தொடங்கப்பட்டு இப்பணிகள் நிறைவடையவுள்ளது. வருகின்ற ஜுலை மாதம் 15 முதல் ஜுலை 20 - ம் தேதிக்குள் தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு அங்கு ஏற்கனவே குடியிருக்கும் குடியிருப்புதாரர்களுக்கு வீடுகள் ஒப்படைக்கப்படும் என தெரிவித்தார்.

மேலும் இராஜாதோட்டம் திட்டப்பகுதியில் குடியிருப்புதாரர்களின் கோரிக்கையின் படி நியாயவிலை கடை, அங்கன்வாடி, திறந்தவெளி உடற்பயிற்சி கூடம், சிறுவர் விளையாட்டு மைதானம் போன்றவையும் ஏற்படுத்தி தரப்படவுள்ளது. பெரியார் நகர், ஜவகர்நகர் பகுதியில் படைப்பகம் ஏற்படுத்தி தருவதற்காக ஏற்கனவே இருந்த நூலகம் அகற்றப்பட்டு புதிதாக படைப்பகம், நூலகம் கட்டித்தரும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பெரியார்நகர் படைப்பகம் ஆகஸ்ட் 10 ஆம் தேதிக்குள் நிறைவு செய்து படிக்கின்ற மாணவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என தெரிவித்தார்.

வடசென்னை பகுதியில் இராயபுரம், ஆர்.கே.நகர், பெரம்பூர், திரு.வி.க நகர் எழும்பூர், வில்லிவாக்கம் போன்ற சட்டமன்ற தொகுதிகளில் 9 இடங்களில் படைப்பகம் நிறுவுவதற்காக ஒப்பந்தம் போடப்பட்டு, இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் அதையும் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர அனைத்து நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது மட்டுமல்ல தென் சென்னையிலும் இதுபோன்ற 6 படைப்பகங்கள் உருவாக்க ஒப்பந்தங்கள் போடப்பட்டு வருகின்றது. இப்பணிகள் ஜனவரி, பிப்ரவரி மாதத்திற்குள் முடிக்கப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என தெரிவித்தார்.

இந்த படைப்பகத்தின் நோக்கம் எல்லாருக்கும் எல்லாம் என்ற முதலமைச்சர் அவர்களின் சித்தாந்தத்தின் படி தொடங்கப்பட்டது. ஏழை எளிய மாணவர்கள், வீட்டில் கணினி, அருகலை ( WIFI) பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள பிள்ளைகள் , அதிக புத்தகங்கள் விலைக்கு வாங்கி படிக்க முடியாத நிலையில் உள்ள பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்காக இத்திட்டம் உருவாக்கப்பட்டது. முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்ட இத்திட்டம் 6 மாதத்திற்குள் 6 மாணவர்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணயத்தில் (TNPSC) மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

இது போன்ற படைப்பகம் அதிக அளவு ஏற்படுத்துவது மூலம் நிச்சயமாக தமிழகம் கல்வியில் ஒரு சிறந்த நிலை அடையும். கல்வி நிலைப் பெற்றால் பொருளாதாரம் நிலைபெறும். கல்வியும், பொருளாதாரம் நிலைபெற்றாலே வன்முறையற்ற ஒரு சமுதாயம் உருவாக்கப்படும். முதலமைச்சர் அவர்களின் எல்லாருக்கும் எல்லாம் என்ற எண்ணங்களுக்கு வண்ணம் சேர்க்கும் வகையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் முழுமுயற்சியோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என தெரிவித்தார்.

இந்தஆய்வின் போது தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் (பொ) ஜி.எஸ்.சமீரன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முதன்மை செயல் அலுவலர் சிவஞானம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல துணை ஆணையர் பிரவின், திரு.வி.க மண்டல குழு தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமை பொறியாளர் வி.எஸ்.கிருஷ்ணசாமி, வாரிய மேற்பார்வை பொறியாளர் (பொ) இளம்பரிதி, நிர்வாகப் பொறியாளர் திரு.ஜானி சாம்ராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

### எஸ்.ஆர்.ராஜாசுரேஷ் தலைமை! கோ.வி.லெனின் பங்கேற்பு!

# 122வது வட்டக் கழக பாக முகவர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி அறிவிப்பு!

சென்னை, ஜுன் 20-

இது குறித்து பகுதிச் செயலாளர் நந்தனம் கி. மதி அறிவிப்பு வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்கள் ஆணைக்கிணங்க சென்னை தென்மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம்மதி முன்னிலையில், வட்டச் செயலாளர் எஸ்.ஆர். ராஜாசுரேஷ் தலைமையில் BLA2& BLC ஆலோசனைக் கூட்டம் இன்று (20.06.2025 - வெள்ளிக்கிழமை) மாலை 6:00மணியளவில் ஆழ்வார்பேட்டை வட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மயிலை தொகுதி பொறுப்பாளர் கோ.வி.லெனின் பங்கேற்று ஆலோசனை வழங்குகிறார்.

எனவே வட்ட கழக நிர்வாகிகள், BLA2 மற்றும் BLC அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி அறிவித்துள்ளார்.



கழக தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மாவட்டச் செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ. ஆலோசனைபடி சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி வட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மயிலை கிழக்கு பகுதி கழக செயலாளர் எஸ்.முரளி தலைமையில் வருகின்ற 22 ஆம் தேதி காலை 9 மணி அளவில் ராம் திருமண மண்டபத்தில் நடைபெற இருக்கின்ற BLA–2 ஆலோசனைக் கூட்டம் மற்றும் கழக உறுப்பினர் சேர்த்தல் ஜுன் 20 முதல் ஜுலை 20 வரை பாகம் தோறும் பாக உறுப்பினர் சேர்க்கை சம்பந்தமாகவும் கழக ஆக்கப் பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது வட்டக் கழகச் செயலாளர்கள் ஏ.தாஸ், மா.பா .அன்பு, அ.தவனேசன், வெற்றிவேல், கோ. கண்ணன், துரை பார்த்திபன், பா.பொன்னுசாமி, பகுதி கழக நிர்வாகிகள் எல்.உதயகுமார், சீமன் சேகர் கலந்து கொண்டனர்.

### கழக துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி தலைமையில்

## திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி - பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்கள் - BLA 2 பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம்

### மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு



திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட மாநகர ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்கள் மற்றும் BLA 2 பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம் கழகத் துணைப் பொதுச் செயலாளரும் மண்டல பொறுப்பாளருமான ஆ.இராசா எம்.பி தலைமையில் 28-06-2025 சனிக்கிழமை காலை 10 மணியளவில் ஆவடி அடுத்த பட்டாபிராம் தண்டரை பகுதியில் உள்ள ஜெய் கிரிஷ் மண்டபத்தில் நடைபெறுகிறது.

மேற்கண்ட ஆலோசனை கூட்டத்திற்கு மாநில ஆதிதிராவிடர் நல குழு செயலாளரும் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி , தொகுதி பார்வையாளர்கள் பி.டி.சி.செல்வராஜ், நிவேதா ஜெசிகா , மாவட்ட அவைத் தலைவர் மா. இராஜி தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில இளைஞரணி துணைச்செயலாளர் பிரபு கஜேந்திரன், மாநில சிறுபான்மை நல உரிமை பிரிவு இணை செயலாளர் சி. ஜெரால்டு, மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன். எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ். ஜி.ராஜேந்திரன், ஜி.விமல்வர்ஷன். முத்தமிழ்செல்வன். வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனாசுதாகர். எஸ்.சங்கர் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

அது சமயம் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் ஆவடி தொகுதிக்குட்பட்ட 457 BLA2 பாக முகவர்கள் பூவிருந்தவல்லி தொகுதிக்குட்பட்ட 397 BLA2 பாக முகவர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

**அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்**
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.



சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி 92 வது வட்டத்தில் பொதுமக்களின் நலன் கருதி அனைவரும் பயன் பெரும் வகையில் தாகம் தீர்க்கும் தானியங்கி கட்டணமில்லா குடிநீர் வழங்கும் இயந்திரத்தை காணொளி மூலம் கழக தலைவர் துணை முதல்வர், உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் திறந்து வைத்தனர். இந்நிகழ்ச்சியில் 92 வது வட்டத்திற்கு உட்பட்ட முகப்பேர் மங்கள் ஏரி பூங்கா அருகே அமைக்கப்பட்ட குடிநீர் இயந்திரம் உபயோகிக்கும் நிகழ்ச்சியில் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., நொளம்பூர் வே.ராஜன், பி.கே.மூர்த்தி, எம்.எம்.ஜெயரத்தினம், கே.வி.திலகர், கே.நீலகண்டன், எம்.ஏ.செந்தில் சுரேஷ், கே.குமரேசன், எம்.சி.எழில்அரசு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.